

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் தலைமையை ஏற்று, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் , மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி முன்னிலையில் கரூர் மாநகராட்சி, கரூர் வடக்கு பகுதி 2வது வார்டு அதிமுக முன்னாள் கவுன்சிலர் காளியம்மாள், தலைமையில் வடக்கு நகர வர்த்தக அணி துணை தலைவர் ரமேஷ், 2வது வார்டு இணைச் செயலாளர் முத்துமாணிக்கம், சதீஸ்குமார், வார்டு மகளிர் அணி மைதிலி, எம்.ஜி.ஆர்.மன்ற துணைச் செயலாளர் ராமு, புஞ்சை புகழூர் 4வது வார்டு அதிமுக வார்டு நிர்வாகி கருணாகரன், ஆகியோர் தங்களை திமுகவில் இணைத்துக்கொண்டனர். குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி கழக செயலாளர் கரூர் கணேசன், கரூர் மேற்கு பகுதி கழக செயலாளர் தாரணி சரவணன், 2வது வார்டு செயலாளர் வடிவேல்அரசு உட்பட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கோவை வின்சென்ட் சாலையில் உள்ள, மன்ப உல் உலூம் மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில் அப்பள்ளியினை, மேல் நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டதற்கான துவக்க விழா தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. பள்ளி தரம் உயர்த்தப்பட்ட ஆணையை மன்ப உல் உலூம் கல்வி நிறுவனங்கள் தலைவர் இனாயத்துல்லா, பள்ளி தாளாளர் மு.சு.சித்திக் ஆகியோரிடம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார், பாடி மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், கணபதி, ராஜ்குமார் எம்.பி., மேயர் ரங்கநாயகி, கழக மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனாசெந்தில் , பகுதிக் கழக செயலாளர்கள் வி.ஐ.பதுருதீன், எஸ்.ஏ.காதர், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் முபஷிராபதுருதீன், வட்டக் கழக செயகாளர்கள் அப்பாஸ், டவுன் ஆனந்த், லேனா நிஷார், தேவசீலன் லேனா ரஹீம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# அரியலூர் மாவட்டத்தில் 2 புதிய புறநகரப் பேருந்துகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

*அரியலூர், அக். 22 -*

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை பேருந்து நிலையத்தில், போக்குவரத்துத் துறையின் சார்பில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலத்தின் மூலம் BS VI 02 புதிய புறநகர்ப் பேருந்துகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, கலந்து கொண்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில், பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம், BS VI 02 புதிய புறநகரப் பேருந்துகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

அதன்படி இப்புதிய புறநகரப் பேருந்து எண். TN.45.N4491 காலை 9.30 மணிக்கு செந்துறையில் இருந்து புறப்பட்டு நாகல்குழி, ஜெயங்கொண்டம், விருத்தாசலம் வழியாக சென்னை மாதவரத்தினை சென்றடையும், இரவு 10.00 மணிக்கு சென்னை மாதவரத்திலிருந்து புறப்பட்டு விருத்தாசலம், ஜெயங்கொண்டம், நாகல்குழி வழியாக செந்துறையை வந்தடையும். புறநகரப் பேருந்து எண்.

TN.45.N4492 காலை 9.30 மணிக்கு ஜெயங்கொண்டத்திலிருந்து புறப்பட்டு விருத்தாசலம் வழியாக சென்னை கிளாம்பாக்கத்தை சென்றடையும், இரவு 09.30 மணிக்கு சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து புறப்பட்டு விருத்தாசலம், ஜெயங்கொண்டம், இரும்புலிக்குறிச்சி வழியாக செந்துறையை வந்தடையும் வகையில் இன்று முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிர்வாக இயக்குநர் இரா. பொன்முடி, பொது மேலாளர் ஆ.முத்துக்கிருஷ்ணன், துணை மேலாளர் வணிகம் சாமிநாதன், கோட்ட மேலாளர் இராமநாதன், ஜெயங்கொண்டம் கிளை மேலாளர் இராம்குமார், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் ஆ.சங்கர், வி.சி.க. மாவட்ட செயலாளர் செல்வநம்பி, ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் செ.இளஞ்செழியன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் ஆதி.இளங்கோவன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வம், பொதுக்குழு உறுப்பினர் சுமதி கருணாநிதி, முன்னாள் ஒன்றிய துணை செயலாளர் சிவபிரகாசம், ஒன்றிய துணை செயலாளர்கள் காளமேகம், கருணாநிதி, அன்பரசி, தகவல்தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ரமணி, இலக்கியா, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சர்புதீன், செல்வம், தர்மராஜ், இராமராஜன், சித்ரா, தொ.மு.ச. மத்திய சங்க செயலாளர் சேகர், அரியலூர் தொமுச செயலாளர் பி.வி.அன்பழகன், தொ.மு.ச. கொளஞ்சி, செல்வம்,இளவரசன், கழக நிர்வாகிகள் ஆனந்த், சுந்தர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள், மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிவிப்பு!

*தருமபுரி, அக். 22 -*



தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை ( 23.10.2024 - புதன்கிழமை) காலை 11.00 மணி அளவில் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் சி.செல்வராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் நான் (மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ..சுப்ரமணி) சிறப்புரையாற்றுகிறேன்.

அது சமயம் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : வாக்காளர் பட்டியல் சேர்த்தல், நீக்கல் முகாம் குறித்து தொகுதி பார்வையாளர்கள் அறிமுக ஆலோசனைக் கூட்டம் குறித்து கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



நீலகிரி மாவட்டம். கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், நகர. ஒன்றிய. பேரூர். கழக நிர்வாகிகள் தொகுதிக்குட்பட்ட உள்ளாட்சி மன்றத்தினுடைய தலைவர்கள் கலந்து கொண்ட தொகுதி கூட்டம் கூடலூர் சாஸ்தாபுரி ஓட்டலில் மாவட்ட கழக செயலாளர் பா.மு முபாரக் தலைமையில் நடைபெற்றது. கூடலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளரும் மாநில பொறியாளர் அணி துணை செயலாளருமான ஆர். பரமேஷ் குமார் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலுக்காக தலைமைக் கழகத்தால் கொடுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்து விளக்கிப் பேசினார். மாவட்டக் கழக துணை செயலாளர் ரவிக்குமார். பொருளாளர் நாசர், தலைமை செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திராவிட மணி. உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து பேசினர்.



கழக நெசவாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக நெசவாளரணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமையில் துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம், கழக நெசவாளரணி எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் செயலாளர்கள் அருப்புக்கோட்டை க.பழனிசாமி, காஞ்சிபுரம் தி.அன்பழகன், கரூர் பரணி கே.மணி, நெல்லை சொ.பெருமாள், சிந்து ரவிச்சந்திரன், துணைச் செயலாளர்கள் வசந்த் அன் கோ.குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி, தேனி ராமசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சரும், இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவதெனவும், 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல் பணிகள், கழக ஆக்க பணிகள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# கரூர் மாவட்டத்திற்கு ஐ.டி. பார்க் - ரூ.3 ஆயிரம் கோடியில் திட்டங்கள்!

## வேலைவாய்ப்பு முகாமில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

*கரூர், அக். 22-*

கரூர் மாவட்டத்திற்கு ஐ.டி. பார்க் உள்பட 3 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி உள்ளார்கள். அதற்காக கோடான கோடி நன்றியை தெரிவிப்பதாக தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமன ஆணைகளை வழங்கி அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசினார்.

கரூர் தாந்தோணி அரசு கலைக்கல்லூரியில் 150க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்ட மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மின்சாரம். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கலந்து கொண்டு தேர்வானவர்களுக்கு பணிநியமன உத்தரவுகளை வழங்கினார்.

இந்நிகழ்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மீ. தங்கவேல், கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை). ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க. சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படியும். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதல்படி, கரூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம். தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இந்த தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 150க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான நபர்களை வேலைக்குத் தேர்ந்தெடுத்து உள்ளார்கள்.

### 5071 நபர்கள் தேர்வு!

மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி அதன் மூலம் பணி ஆணைகளை பெறுபவர்களின் முகத்தில் உள்ள மகிழ்ச்சியைப் பார்க்கும் போது முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி நடைபெற்ற இந்த முகாமின்



வெற்றியாகும். கரூர் மாவட்டத்தை பொருத்தவரை இதுவரை 7 தனியார் நிறுவனங்களின் வேலை வாய்ப்பு முகாம்களும், சிறிய அளவிலான 53 வேலைவாய்ப்பு முகாம்களும் என மொத்தம் 60 முகாம்கள் நடத்தப்பட்டு அதில் 1425 தனியார் நிறுவனங்கள் பங்கு பெற்று உள்ளது. இதன் மூலம் 5071 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு 420 தொழில் நிறுவனங்களில் பணி புரியும் வாய்ப்பை பெற்றுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளில் முதலீடுகளை ஈர்த்து அதன் மூலம் பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கி இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள்.

ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் மக்களை தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48. இல்லம் தேடி கல்வி, புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். ஆட்சி பொறுப்பு ஏற்ற 3 ஆண்டுகளுக்குள் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கி இலவச மின் இணைப்புக்காக பதிவு செய்து வாழ்நாளில் தங்களுக்கு இலவச மின் இணைப்பு கிடைக்காதா என்று ஏக்கத்தில் இருந்தவர்களுக்கு மின் இணைப்புகளை வழங்கி பெருமை சேர்த்து உள்ளார்கள்.

கரூர் மாவட்டம் 4 சட்டமன்றத் தொகுதிகளை கொண்ட சிறிய மாவட்டமாக இருந்தாலும் கூட ஆட்சி பொறுப்பேற்ற முதல் ஆண்டிலேயே அரசு வேளாண்மை கல்லூரி தொடங்கி மாணவர் சேர்க்கையும் தொடங்கி தொடர்ந்து கல்வி பெற்று வருகிறார்கள். அரவக்குறிச்சிக்கு ஒரு அரசு கலைக் கல்லூரி என எண்ணற்ற பல திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு வழங்கி வருகிறார்கள்.

### முதல்வருக்கு கோடான கோடி நன்றி!

கரூர் மாவட்டத்திற்கு ஒரு ஐ.டி பார்க் வேண்டுமென்று முதலமைச்சர். துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்ற போது கரூர் மாவட்டத்திற்கு அத்தகைய சிறப்பு திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் வழங்கியமைக்காக கரூர் மாவட்ட பொதுமக்களின் சார்பாக கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ ரூ. 3 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை கரூர் மாவட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கி உள்ளார்கள். அவர்கள் அறிவிக்கக்கூடிய திட்டங்களை விரைவாக செயல்படுத்த கூடிய வகையில் துணை முதலமைச்சர் அவர்கள் மாவட்டம் தோறும் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி பல்வேறு வளர்ச்சி திட்டங்களை விரைவாக முடிக்க உத்தரவுகளை வழங்கி உள்ளார்கள்.

இங்கு வந்துள்ள பெரியோர்கள் இளைஞர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சாதனைத் திட்டங்களை பெற்றிடும் வகையில் என்றும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்திட வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக் கொண்டு, இந்த சிறப்பு வாய்ந்த வேலைவாய்ப்பு முகாமில் பங்கு பெற்று மாவட்ட ஆட்சித்தலைவரோடு இணைந்து எழுச்சியோடு பணியாற்றிக் கொண்டிருக்கும் அலுவலர்கள் அனைவருக்கும். பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் .ம.கண்ணன், துணை மேயர் தாரணி பசரவணன், மாநகராட்சி ஆணையர் சுதா, மாநகராட்சி மண்டல குழு தலைவர் எஸ்.பி.கனகராஜ், கோல்டுஸ்பாட் ஆர்.எஸ்.ராஜா, அன்பரசு, சக்திவேல், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குனர் வி. பாபு, 44 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ். மோகன்ராஜ் தான்தோன்றி மலை அரசு கலைக் கல்லூரி முதல்வர் அலெக்சாண்டர். தாந்தோணி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சிவகாமி. குளித்தலை நகர்மன்ற தலைவர் சகுந்தலாபல்லிராஜா, பள்ளப்பட்டி நகர்மன்ற தலைவர் .முனைவர்ஜான், வேலைவாய்ப்புத்துறை மண்டல இணை இயக்குனர் கோவை ஆ.ஜோதிமணி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் டி. ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## என்.ஆர்.பி.சீனிவாசன்

**அக்டோபர் 22 (2022)**



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக பணியாற்றியவர்.

நம்பரை ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தருமபுரி கிழக்கு மாவட்டம்

# பென்னாகரம் வடக்கு-தருமபுரி மேற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி கிழக்கு மாவட்டம், பென்னாகரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.சபரிநாதன் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக திரு.**ஆர். வீரமணி** (மாக்கனூர், பென்னாகரம், தருமபுரி மாவட்டம்) அவர்கள் பென்னாகரம் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும்;

தருமபுரி மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.ஆர்.சேட்டு அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **டி.எல்.காவேரி** (வி.ஜெட்டிஅள்ளி, இலக்கியம்பட்டி ஊராட்சி, தருமபுரி மாவட்டம்) அவர்கள் தருமபுரி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 20.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.